




நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 124 | 29.10.2025 | WEDNESDAY | IPPASI : 12 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 124 | 29.10.2025 | புதன்கிழமை | ஐப்பசி : 12 | விலை : ரூ.5/– |



3 திருச்சி விமான நிலையத்திற்கு ராஜராஜ சோழ தேவரின் பெயர் சோழ பேரரசு கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

4 2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதல்வர் சூளுரை

2 கேளிக்கை பூங்காக்களில் பெருஞ் சக்கரங்கள் இயக்க தரச் சான்றிதழ் கட்டாயம்: தமிழக அரசு உத்தரவு


# உரிய நேரத்தில் நெல் கொள்முதல் செய்யாதது ஏன்? தமிழக அரசுக்கு விஜய் சரமாரி கேள்வி

சென்னை: அக்.29-

விவசாயிகள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த நெல்மணிகளை உரிய நேரத்தில், உரிய விலைகொடுத்து கொள்முதல் செய்யாமல் அவர்களின் வாழ்வாதாரத்தை வீணாக்கியதன் கரணம் என்ன என்று தமிழக அரசுக்கு தவெக தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த செப்.27ம் தேதி கரூரில் நடந்த தவெக பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து, நேற்று அந்த துக்க நிகழ்வில் 30வது நாளில் விஜய் நெரிசலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னை வரவழைத்து ஆறுதல் கூறியதோடு மன்னிப்பும் கோரினார்.

இந்நிலையில், ஒரு மாத காலமாக எந்தவித அரசியல் நகர்வுகளிலும் ஈடுபடாமல் இருந்த விஜய், இன்று நெல் கொள்முதல் விவகாரம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஏற்கெனவே தனது பிரச்சாரங்களில் திமுகவை விளாசிய விஜய், ஒரு மாதம் கழித்து வெளியிட்ட அறிக்கையிலும் திமுகவையே கடுமையாக விமர்சித்துள்ளார்.

நெல் கொள்முதல் விவகாரம் தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தொடர் மழையால், விவசாயிகளின் கடின உழைப்பால் விளைவிக்கப்பட்ட நெல்மணிகள் முதல்முறை வீணான போதே துரிதமாகச் செயல்பட்டு மீதமுள்ள நெல்மணிகளைப் தமிழக அரசு பாதுகாத்திருக்க வேண்டாமா?

விவசாயிகள் மீது உண்மையாகவே அக்கறை கொண்டிருக்கும் அரசு என்றால் அது அவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து, பொருளாதார ரீதியில் அவர்கள் உயர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாக இருக்க வேண்டும். மாறாக, ஏழை விவசாயிகள் தங்களின் கடின உழைப்பின் வாயிலாக விளைவித்தவற்றை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் அவற்றை மழையில் நனையவிட்டு



வீணாக்கி, ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஒரு அரசை என்னவென்று சொல்வது?

ஏழை விவசாயிகள் தாங்கள் காலங்காலமாகச் செய்து வரும் உழவுத் தொழில் மூலமே விளைவித்த பொருட்களை விற்று அதைப் பணமாக்கித் தங்களின் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அவர்கள் பொருளாதார ரீதியில் வலுவடைய வேண்டும் என்றால் அதற்கு முழு மூலதனம் என்பது விவசாயமும் அதற்கான உழைப்பும் மட்டுமே!

ஆனால் விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை விற்று, பணத்தைக் கையில் பார்த்துவிடாமல் தடுப்பதே ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் நோக்கமாக இருந்து வருகிறதா என்கிற ஐயம் ஏற்படுகிறது. இது இந்த ஆண்டு மட்டுமில்லை. ஒவ்வோர் ஆண்டுமே இதுதான் நிலை என்கிறபோது வேதனையாகவும் உள்ளது.

வெற்று விளம்பரத்திற்காக நானும் டெல்டாக்காரன்தான் எனப் பெருமை பேசிவரும் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசுக்கு, ஏழை விவசாயிகள் சார்பாக நாம் முன் வைக்கும் ஒரு சில வினாக்கள்.

›› டெல்டா விவசாயிகள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த நெல்மணிகளை உரிய நேரத்தில், உரிய விலை கொடுத்துக் கொள்முதல் செய்யாமல் அவர்களின் வாழ்வாதாரத்தை வீணாக்கியதன் கரணம் என்ன?

›› பருவமழை என்பது ஒவ்வோர் ஆண்டும் பெய்யக் கூடியது. இந்தப் பருவமழையை நம்பியே விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். அப்படியிருக்க, அந்தப் பருவமழையினால் விவசாயப் பயிர்கள் மற்றும் விளைநிலங்கள் சேதமடையாமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

›› அதிக மழைப் பொழிவு இருந்தாலும் விவசாய நிலத்தில் பயிர்கள் மூழ்காதபடி போதுமான தண்ணீரைத் தவிர்த்து, அதிகப்படியான தண்ணீர் விவசாய நிலங்களில் இருந்து தானாகவே வெளியேறி, சேமித்து வைக்கப்பட வேண்டிய நீர்நிலைகளைச் சென்றடைய, போதுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

›› விளைவிக்கப்பட்ட நெல் உள்ளிட்ட தானியங்கள் மழையில் நனைந்து வீணாகாமல் நல்லமுறையில் பாதுகாப்பாக சேமித்து வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

›› ஒவ்வோர் ஆண்டும் நெல்மணிகள் மழையில் நனைந்து வீணாகின்றனவே, அதைப் பார்த்தாவது, அடுத்த ஆண்டாவது நெல்மணிகள் மழையில் நனையாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எண்ணம் வரவில்லையா?

›› இல்லையெனில் நெல் உள்ளிட்ட தானியங்கள் வீணாகட்டும், விவசாயிகளின் வாழ்வு பாதிக்கப்படட்டும், அதனால் நமக்கென்ன? என்று தெரிந்தே ஒவ்வோர் ஆண்டும் கடந்து போகிறதா இந்த அரசு?

›› கடந்த சில நாட்களாக பெய்த மழையால், நெல்மணிகள் நனைந்து வீணாகியதற்கும், அதை விளைவித்த விவசாயிகளின் வேதனைகளுக்கும் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?

விவசாயிகள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த நெல்மணிகள் இந்த வெற்று விளம்பர திமுக அரசின் அலட்சியத்தால் மழையில் நனைந்து வீணாகி, மூட்டையிலேயே முளைத்துள்ளன. அதைப் போல், தமிழ் நாட்டு மக்கள் மனங்களில் முளைத்து வளர்ந்து செழித்து நிற்கும் அரசு மீதான எதிர்ப்பு இன்னும் வலுவாகி, வெகுஜன மக்கள் விரோத திமுக ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பப் போவது உறுதி.

வடகிழக்கு பருவமழைக் காலம் இன்னும் நீடிக்க உள்ளது. எனவே இனியேனும் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்தி, இனி வரும் மழையினால் நெல் உள்ளிட்ட பயிர்கள் வீணாகாமல் தடுக்க வேண்டும்.

அத்தோடு பருவமழையின் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விளம்பர செயல்பாடுகளாக இன்றி போர்க்கால அடிப்படையில் உண்மையாகவே மேற்கொள்ள வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூர் கோல்டன் நகர் 32 வது வார்டில் பொதுமக்கள் சிறப்பு கூட்டம்

திருப்பூர், அக்.29-

மாநகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருப்பூர் மாநகராட்சி முழுவதும் 60 வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடைபெற்ற வருகிறது

அதன் ஒரு பகுதியாக திருப்பூர் 2வது மண்டலம் 32வது வார்டு ஏ.எஸ் பண்டித் நகர் சமுதாய நலக்கூடம் மஹாலில் இன்று காலை 11=00 மணிக்கு நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும் தங்களது வார்டுகளில் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து தருமாறு




அவர்கள் கோரிக்கை மனுவாக எழுதிக் கொடுத்தனர். இந்த நிகழ்வில் திருப்பூர் மாநகராட்சி 2 வது மண்டல தலைவர்,32வது திமுக வட்ட கழக செயலாளர் தம்பி ஆர். கோவிந்தராஜ், உதவி ஆணையர் சக்திவேல், கண்காணிப்பாளர் செல்வகுமார், இளம் பொறியாளர்கள் சண்முகசுந்தரம்,ராஜு, பில் கலெக்டர் ஜெகநாதன், கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணி. கார்த்திக் பழனிச்சாமி. சாக்கு சம்பத். சிவசக்திவேல். குப்புசாமி. தனபால். பாபுஜி. ராம் குட்டி பிரகாஷ். மகளிர் அணியினர் சுதா. சகிலா பேகம் மற்றும் ஊர் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்..

## அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)

(24 x 7)

88705 00000

sakkraviyugam2025@gmail.com

## இரவு பகல் பாராமல் எந்த இடத்திலும் பொதுமக்களுக்கான சேவை செய்வது திராவிட மாடல் அரசு திண்டுக்கல் இரயில் நிலையத்தில் ஆத்தூர் தொகுதி பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்று தீர்வு வழங்கினார்

### கட்சி நிர்வாகிகள் கருத்து வேறுபாடுகளை மறந்து கட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும் தினசரி 1 மணிநேரம் கட்சி நிர்வாகிகள் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும் ஐ.பெரியசாமி உத்தரவு





திண்டுக்கல் அக்.29

இரவு பகல் பாராமல் எந்த இடத்திலும் பொதுமக்களுக்கான சேவை செய்வது திராவிட மாடல் அரசு என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு திண்டுக்கல் இரயில் நிலையத்தில் ஆத்தூர் தொகுதி பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்று தீர்வு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்;கள் கட்சி நிர்வாகிகள் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை மறந்து கட்சியின் வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தன்னை சந்திக்க வரும் பொது மக்களிடம் இரவு பகல் பாராது கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கி வருவதால் அவரை ஆத்தூர் தொகுதி மக்கள் தென்பாண்டி சிங்கம், ஆத்தூர் தொகுதியின் செல்லப்பிள்ளை என அழைப்பது வழக்கம். தமிழக முதல்வரை சந்திக்கவும் சென்னையில் நடைபெறும் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக திண்டுக்கல் இரயில்நிலையத்திற்கு வந்த அமைச்சர் பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை மனு கொடுத்து தீர்வு பெற்றனர். கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கட்சி நிர்வாகிகள் தங்களுக்குள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக கட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும். தினசரி 1 மணி நேரம் பொதுமக்களை சந்தித்து தமிழக முதல்வரின் சாதனை திட்டங்களை எடுத்துரைக்கவேண்டும். மேலும் தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்ய முன் வரவேண்டும் என்றார்.

நிகழ்வின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட திமுக துணை செயலாளர் ஆ.நாகராஜன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பிள்ளையார் நத்தம் முருகேசன் ரெட்டியார்சத்திரம் மணி, இன்பராஜ், திண்டுக்கல் மாநகர செயலாளர் ச.ராஜப்பா, பொருளாளர் மீடியா சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் ஜானகிராமன், ராஜேந்திரகுமார், சந்தோசமுத்து, வழக்கறிஞர் ராபர்ட், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அரசு ஒப்பந்தகாரர்கள் ஆலமரத்துப்பட்டி விக்னேஷ், என்.பஞ்சம்பட்டி ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## வீரமரணம் அடைந்த திருப்பாச்சேத்தி SI ஆல்வின் சுதன் நினைவு நாள் நினைவிடத்தில் காவல் ஆய்வாளர் தலைமையில் வீரவணக்க அஞ்சலி

திசையன்விளை, அக்.29-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள கைலாசபுரத்தை சேர்ந்தவர் ஆல்வின் சுதன். இவர் 2013 ம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது சமூக விரோதிகளால் தாக்கப்பட்டு வீரமரணம் அடைந்தார். அவரின் 13 ம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி திசையன்விளை அருகே உள்ள கைலாச புரத்தில் அவரது நினைவிடத்தில் நடந்தது. திசையன்விளை காவல்துறை ஆய்வாளர் சீதாலட்சுமி தலைமையில் காவல்துறையினர் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினர். மேலும் ஆல்வின் சுதனின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். கடமைக்காக உயிர் நீத்த ஆல்வின் சுதன் போன்ற வீர காவலர்களின் தியாகம் எப்போதும் மனதில் நிலைத்து நிற்கும் என்று தெரிவித்தனர்.

## பள்ளி மாணவர்களுடன் கலைத் திருவிழாவை துவக்கிய சபாநாயகர் அப்பாவு



■ திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தூய சவேரியார் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவர்களுக்கான கலைத் திருவிழா இன்று (அக்டோபர் 28) நடைபெற்றது. இந்த விழாவை மாணவிகளுடன் சேர்ந்து தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் அப்பாவு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



## இடையன் குடி கால்டுவெல் மேல் நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க கூட்டம் ஆண்டு விழா நடத்த முடிவு

திசையன்விளை, அக்.29-

திசையன்விளை அருகே உள்ள இடையன்குடி சி.சி.எம்.மேல்நிலைப் பள்ளியில் பழைய மாணவர் சங்க 102 வது ஆண்டு விழாவிற்கான செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் பள்ளியின் பழைய மாணவர்களான பள்ளியின் தலைமை ஆசிரியர் வெஸ்லி சாலமன், பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் ஜெப தாமஸ், செயலாளர் சாமுவேல், கால்டுவெல் வாசகர் வட்ட தலைவர் கவிஞர் மருதூர் மணிமாறன், ராஜராஜன், ஜெய்கே பிலிப்ஸ் ஜெபக்குமார், பொன்சேகர், செல்வ சிங், சாமுவேல், குண சிங், பாபு, ஜெபா, தர்மராஜ், ஸ்டீமன், கிறிஸ்டோபர், கிருபாகரன், தர்மராஜ், அனிதா ஜான்சன், ஏஞ்சல், ரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். வரும் டிசம்பர் 26 ஆம் தேதி சங்கத்தின் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நடத்த முடிவு செய்யப்பட்டது.சங்கத்தின் சார்பில் பள்ளியில் மாணவர்கள் பயன் பெறும் வகையில் சைக்கிள் ஸ்டாண்ட் அமைக்கவும், சமையலறையை சீர் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

## பணகுடி அருகே முன் பகை காரணமாக வீடு புகுந்து மாணவிகள் உட்பட 5 பேர் மீது தாக்குதல்

### 6 பேர் கொண்ட கும்பலை போலீசார் தேடி வரும் நிலையில் தாக்குதல் நடத்திய CCTV காட்சிகள்



திருநெல்வேலி, அக்.29-

திருநெல்வேலி மாவட்டம் பணகுடி அடுத்த சிவகாமிபுரம் பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளி பொன்ராஜ். இவர் நேற்று மதியம் தனது குடும்பத்துடன் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த மற்றொரு குடும்பத்தார் 6 பேர் உட்பட பொன்ராஜ் வீட்டிற்கு கம்பு கற்கள் போன்ற ஆயுதங்களை கொண்டு வந்து, பொன்ராஜ் வீட்டை சூறையாடி மற்றும் வீட்டினில் அமர்ந்திருந்த திவ்யலட்சுமி ஜெனிஷா ஜோதி மற்றும் கல்லூரி மாணவி டெல்சி ஆகியோரை சரமாரியாக தாக்கினர். 5 பேரும் படுகாயம் அடைந்த அவர்களை அக்கம் பக்கத்தினர் மீட்டு நாகர்கோயில் அரசு ஆசாரிப்பள்ளம் மருத்துவ மனையில் சிகிச்சை க்காக அனுமதிக்கப்பட்டனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு பொன்ராஜ் குடும்பத்தினருக்கும் அதே பகுதியை சேர்ந்த மற்றொரு குடும்பத்தினருக்கும் முன்பாக இருந்து வந்ததாகவும் இதனால் தான் இந்த தாக்குதல் நடந்ததாக போலீசார் முதல் கட்ட விசாரணையில் தெரிகிறது...!!

தாக்குதல் குறித்த CCTV காட்சிகள் தற்பொழுது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# வடபழனி முருகன் கோயிலில் சூரசம்ஹாரம்: திருத்தணியில் சுப்பிரமணியருக்கு புஷ்பாஞ்சலி



சென்னை / திருத்தணி, அக்.29-

கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு வடபழனி முருகன் கோயிலில் சூரசம் ஹாரம் நேற்று நடந்தது. அரோகரா கோஷத்துடன் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். திருத்தணி சுப்பிரமணியர் கோயிலில் புஷ்பாஞ்சலி நடைபெற்றது. சென்னை வடபழனி முருகன் கோயிலில் மகா கந்த சஷ்டி விழா கடந்த 21ம் தேதி வரசித்தி விநாயகரின் மூஷிக வாகன புறப்பாட்டுடன் தொடங்கியது.

அக். 22ம் தேதி முதல் லட்சார்ச்சனை தொடங்கியது. தொடர்ந்து, தினசரி காலை, மாலையில் இரு வேளையும் பூஜைகள், சுவாமி வீதி உலாவும் நடந்தது. விழாவின் பிரதான நாளான நேற்று, உச்சி காலத்துடன் லட்சார்ச்சனை நிறைவு பெற்றது. அதனை தொடர்ந்து தீர்த்தவாரி உற்சவம் நடந்தது. மாலை 5.30 மணிக்கு அம்பாளிடம் வேல் பெற்று, சூரபத்மனை வதம் செய்ய முருகப் பெருமான் புறப்பட்டார்.

நேற்று இரவு சூரசம் ஹாரம் தொடங்கியது. முருகப் பெருமான் படை சூழ, யானை, சிங்கம், ஆடு உள்ளிட்ட ரூபங்களில் வந்த சூரபத்மனை வேலால் வதம் செய்யும் காட்சி அரங்கேறியது. இன்று வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் திருக்கல்யாண வைபவம் நடக்கிறது. திருமண நிகழ்வு முடிந்ததும் முருகப் பெருமானுக்கு மொய் எழுத பக்தர்கள் அழைக்கப்படுவர். மொய் எழுதும் தொகைக்கான ரசீது, பிரசாதங்கள் வழங்கப்படவுள்ளன. இரவு 8 மணிக்கு திருமண விருந்து அளிக்கப்படுகிறது. மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், பெசன்ட் நகர் அறுபடைவீடு முருகன் கோயில், கந்தக்கோட்டம், மாடம்பாக்கம், தேனுபுரீஸ்வரர், குமரக்கோட்டம், குன்றத்தூர், சிறுவாபுரி, திருப்போரூர், வல்லக்கோட்டை உட்பட சென்னை மற்றும் புறநகரில் முருகன் கோயில்களில் கந்த சஷ்டி விழா நடைபெற்றது.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கும் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெற்று வரும் கந்த சஷ்டி விழாவின் முக்கிய விழாவான புஷ்பாஞ்சலி நேற்று நடைபெற்றது. இதில், நேற்று அதிகாலை மூலவர் சுப்பிரமணிய சுவாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

தொடர்ந்து, நேற்று மாலை 4 மணியளவில், சுப்பிரமணிய சுவாமி கோயிலின் உப கோயிலான சுந்தர விநாயகர் கோயில் இருந்து, பல்வேறு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பல வகையான மலர்களை கோயில் ஊழியர்கள், பக்தர்கள் ஊர்வலமாக சரவணப் பொய்கை வழியாக சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு கொண்டு சென்றனர். பிறகு, மாலை 5 மணியளவில் காவடி மண்டபத்தில் உற்சவர் சண்முகருக்கு பல வகையான மலர்களால் புஷ்பாஞ்சலியும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.



## உடற்கல்வி ஆசிரியர்கள் பதவி உயர்வு பட்டியலை அனுப்ப உத்தரவு

சென்னை, அக்.29-

பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்: அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மூலமாக, உடற்கல்வி இயக்குநர் நிலை2 நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2025 ஜனவரி 1ம் தேதி நிலவரப்படி, உடற்கல்வி ஆசிரியர் பணியில் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை2 ஆக பதவி உயர்வு பெற, தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலை தயார் செய்து அனுப்ப வேண்டும்.

அந்த வகையில், இந்த பட்டியலில் இளநிலையில் இரட்டை பட்டப் படிப்பு படித்தவர்களின் பெயரை சேர்க்க கூடாது. பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் இருக்கிறதா என்பதை கூர்ந்தாய்வு செய்ய வேண்டும்.

விதிமுறைகளுக்கு முரணாக பெயர் சேர்க்க பரிந்துரைத்தாலோ அல்லது பெயர் விடுபட்டதாக தெரிவித்து முறையீடு ஏதும் பின்னர் பெறப்பட்டாலோ அதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முழுப் பொறுப்பை ஏற்க நேரிடும். எனவே, இந்த விவகாரத்தில் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேளிக்கை பூங்காக்களில் பெருஞ்சக்கரங்கள் இயக்க தரச் சான்றிதழ் கட்டாயம்: தமிழக அரசு உத்தரவு



சென்னை, அக்.29-

கேளிக்கை பூங்காக்களில் பெருஞ்சக்கரங்கள், பயணிகள் விசைச் சக்கரங்கள் இயக்குவதற்கு, இந்திய தர நிர்ணய கழகத்தின் தரச்சான்றிதழை கட்டாயமாக்கி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெருஞ்சக்கரம், பயணிகள் விசைச் சக்கரம் (Giant/Ferris wheels) என்பது மக்களுக்கு மகிழ்வூட்டும் மிகப் பெரிய கட்டமைப்புகளாகும். இவை கேளிக்கை பூங்காக்கள் போன்ற இடங்களில் மட்டுமின்றி, கோயில் திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சி போன்ற தற்காலிக அமைப்புகளிலும் இயக்கப்படுகின்றன.

அண்மையில், பெருஞ்சக்கரம் உள்ளிட்ட கேளிக்கை இயந்திரங்களில் சில விபத்து தகவல்கள் பதிவாகியுள்ளன. எனவே, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, ஒருங்கிணைந்த பாதுகாப்பு வழிகாட்டுதல் தேவையாக உள்ளதை கருத்தில் கொண்டு, விபத்துக்களை தடுப்பதற்காக நிலையான அமைப்பு மற்றும் தற்காலிக அமைப்புகளின் பெருஞ்சக்கரம், கேளிக்கைப் பூங்கா நிர்வாகிகள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், இந்திய தரநிர்ணய கழக அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் கூட்டம் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களை கருத்தில் கொண்டு பெருஞ்சக்கரம், பயணிகள் விசைச் சக்கரம் இயக்கத்திற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கான அரசாணையை சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, கடந்த செப். 29ம் தேதி வெளியிட்டது.

எனவே, இந்த அரசாணை வெளியிடப்பட்ட ஆறு மாதத்துக்குள் தற்போது இயங்கிவரும் கேளிக்கை பூங்காக்கள் நிலையான அமைப்புகளில் பெருஞ்சக்கரம், பயணிகள் விசைச் சக்கரம் இயக்குவதற்கு இந்திய தர நிர்ணய கழகத்தின் தரச்சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும் முறையை தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து செயல்படுத்துமாறு சுற்றுலா துறை இயக்குநருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## செங்கோட்டை, நாகர்கோவில் ரயில் உள்பட 5 ரயில்களில் பயணிகளின் வசதிக்காக கூடுதல் பெட்டிகள் இணைப்பு



சென்னை, அக்.29-

பயணிகளின் வசதிக்காக, தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை, நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் விரைவு ரயில்களில் தலா 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் பயணிகளின் தேவைகள் அடிப்படையில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகின்றன. அந்தவகையில், 5 விரைவு ரயில்களில் தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் இணைந்து, இயக்கப்பட உள்ளன.

இதன்படி, தாம்பரம் - செங்கோட்டை இடையே இயக்கப்படும் சிலம்பு அதிவிரைவு ரயிலில் தற்காலிகமாக 7 பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன. அதாவது, தலா ஒரு ஏசி 2 அடுக்கு மற்றும் இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் என 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.1ம் தேதி முதலும், செங்கோட்டையில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படவுள்ளன.

தாம்பரம் - நாகர்கோவில் இடையே இயக்கப்படும் விரைவு ரயிலில் தலா ஒரு ஏசி இரண்டடுக்கு மற்றும் ஒரு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் கூடுதலாக இணைத்து இயக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும், நாகர்கோவிலில் இருந்து நவ.3ம் தேதி முதலும் இணைத்து இயக்கப்பட உள்ளன.

சென்னை சென்ட்ரல் - திருவனந்தபுரம் சென்ட்ரல் இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயிலில் ஒரு இரண்டடுக்கு ஏசி பெட்டி இணைத்து இயக்கப்பட உள்ளன. சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.3ம் தேதி முதலும், திருவனந்தபுரம் சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.4ம் தேதி முதலும் இணைக்கப்பட உள்ளன.

இதுதவிர, சென்னை சென்ட்ரல் - ஆலப்புழா இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயில், கோயம்புத்தூர் - ராமேசுவரம் இடையே இயக்கப்படும் ரயில் உள்ளிட்ட ரயில்களில் கூடுதல் பெட்டி இணைக்கப்பட உள்ளது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூண்டி ஏரியிலிருந்து விநாடிக்கு 7,000 கனஅடி உபரிநீர் வெளியேற்றம்



திருவள்ளூர், அக்.29-

வடகிழக்கு பருவமழை தீவிரம் காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து அதிகரிப்பால், சென்னை குடிநீர் ஏரிகளில் ஒன்றான பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு விநாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் புழல் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவ மழை காரணமாக சென்னை குடிநீர் ஏரிக்கு, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து அதிகளவில் நீர்வரத்து தொடங்கியதால், பூண்டி ஏரி முழு கொள்ளளவை எட்டும் நிலையில் இருந்தது. பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கடந்த 15ம் தேதி மதியம் முதல் பூண்டி ஏரியில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நேற்று காலை 6 மணியளவில் பூண்டி ஏரிக்கு, நீர்வரத்து விநாடிக்கு 3,970 கன அடியாகவும், ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு, விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாகவும் இருந்தது. இதனால், 3,231 மில்லியன் கனஅடி கொள்ளளவு, 35 உயரம் கொண்ட பூண்டி ஏரியின் நீர்இருப்பு, 2,601 மில்லியன் கன அடியாகவும், நீர்மட்ட உயரம், 33.27 அடியாகவும் இருந்தது.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து, விநாடிக்கு 5,500 கனஅடியாக இருந்தது. ஆகவே, அப்போது பூண்டி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு விநாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதையடுத்து, பூண்டி ஏரியின் உபரிநீர் செல்லும் கொசஸ்தலை ஆற்றின் இரு கரையோரங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் ஏரிகளில், மற்றொரு ஏரியான புழல் ஏரி 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவும், 21.20 அடி உயரமும் கொண்டது. இந்த ஏரிக்கு, வடகிழக்கு பருவமழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து உள்ளது.

நேற்று காலை 6 மணி நிலவரப்படி, 3,300 மில்லியன் கனஅடி கொள்ளளவு, 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு 2,674 மில்லியன் கனஅடியாகவும், நீர்மட்ட உயரம் 18.33 அடியாகவும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து விநாடிக்கு 265 கன அடியாகவும் இருந்தது. இதையடுத்து, நேற்று காலை புழல் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதை நீர்வள ஆதாரத் துறையினர் நிறுத்தினர்.




■ திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றியத்துக்கு உட்பட்ட ஜே என் பாளையம், கே ரெட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு கொடுங்கியத்தில் திருவேங்கட பெருமாள் மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இம் முகாமில் முன்னாள் ஊராட்சி தலைவர் கலாமணி மோகன், ஊராட்சி செயலாளர் நாட்டு துறை மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் மற்றும் அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார்கள்



# சின்னமனூர் அங்கன்வாடி மையம் காலனி பள்ளி தெருவில் நடைபெற்ற வார்டு அளவிலான சிறப்பு கூட்டம்

தேனி, ஆக்.29-

தேனி மாவட்டம் சின்னமனூர் அங்கன்வாடி மையம்,காலனி பள்ளி தெருவில் நடைபெற்ற ஒவ்வொரு வார்டிலும் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்பு கூட்டம், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை மேல்படுத்திட பொதுமக்களால் தெரிவிக்கப்படும் ஆலோசனை மற்றும் கருத்துக்களை பெற்று அதன்மீது உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு வழங்கப்படும்.அதன்படி தங்களது வார்டு நகர்மன்ற உறுப்பினர் தலைமையில் வார்டு பகுதியில் வமிக்கும் பொதுமக்கள் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் வாட்டு அளவிலான சிறப்புக்கூட்டம் நடைபெற்றது .இந்தக் கூட்டத்தில் 9வது வார்டு கவுன்சிலர் வீரமணி நதியா மற்றும் வார்டு செயலாளர் நரசிம்மன், திமுக பிரமுகர் செந்தில் பாபு ,நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# சின்னமனூர் சிவகாமி அம்மன் திருக்கோவிலில் முருகன் வள்ளி தெய்வானை திருக்கல்யாணம்

தேனி, ஆக்.29-

தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் உள்ள அருள்மிகு பூலா நந்திஸ்வரர் சிவகாமி அம்மன் திருக்கோவில் முருகன் வள்ளி தெய்வானை திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து சுப்பிரமணிய சுவாமிக்கு அர்ச்சகர்களால் யாகசாலை வளர்க்கப்பட்டு வேதமந்திரங்கள்யுடன் திருக்கல்யாணமானது வெகு விமர்சியாக நடைபெற்றது. பக்தர்கள் அரோகரா கோசத்துடன் முருகா முருகா என்றும் மற்றும் பெண்கள் அனைவரும் மஞ்ச கயிறு மாற்றிக்கொண்டனர். தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை பச்சை சிவப்பு பட்டு உடுத்தி பக்தர்களுக்கு காட்சியளித்தார்.





இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் நதியா உட்பட இந்து சமய அறநிலைத்துறை சார்பில் மற்றும் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு, திமுக பிரமுகர் முத்துக்குமார், அறங்காவலர்கள் கலந்து கொண்டனர். திருக்கல்யாணத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சின்னமனூர் மற்றும் சுற்றியுள்ள கிராம பகுதிகளில் ஏராளமான பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு முருகப்பெருமானை கண்டுகளித்து அருள்பெற்று சென்றனர்.

# தேனி மாவட்டம் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 01.11.2025 அன்று கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, ஆக்.29-

தேனி மாவட்டம் உள்ள 130 கிராம ஊராட்சிகளிலும் 01.11.2025 உள்ளாட்சிகள் தினத்தன்று முற்பகல் 11.00 மணியளவில் கிராம சபைக் கூட்டம் கிராம ஊராட்சியின் தனி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆல் நடத்தப்படவுள்ளது.



கிராம சபைக் கூட்டத்தை 130 கிராம ஊராட்சிகளிலும் மிகச் சிறப்பாகவும், பொதுமக்கள் ஆர்வத்துடனும் கலந்து கொள்ளும் வகையிலும், நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் 01.11.2025 சனிக்கிழமை அன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.



■ தேனி மாவட்டம், உத்தமபாளையம் வேம்படி களத்தில் அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலிருந்து மத்திய குழு உறுப்பினர்களான துணை இயக்குநர் ஆர்.கே. சாஹி, தொழில்நுட்ப அலுவலர்கள் ரகு ஷர்மா,டனிஜ் ஷர்மா ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் முன்னிலையில் நெல்லின் ஈரப்பதம் குறித்து ஆய்வு மேற்கொள்ள நெல் மாதிரிகளை (Sample) ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார்கள்.

# அரியூர் கிராமத்தில் டியூக் லயன்ஸ் சங்கம் மற்றும் லியோ லைஃப் டிரஸ்ட் இணைந்து நடத்திய இலவச மருத்துவம்

மதுரை, அக்.29-

மதுரை மேற்கு ஒன்றியம் அரியூர் கிராமத்தில் மதுரை டியூக் லயன்ஸ் சங்கத்தின் சமூகச் சேவை நிகழ்ச்சி மக்களிடம் பெரும் வரவேற்பு

இலவச மருத்துவ முகாம், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருள்கள் வழங்கப்பட்டன.

டியூக் லயன்ஸ் சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாமும், நடைபெற்றது

இந்நிகழ்ச்சி ஆரோக்கியமே செல்வம்" (மெகா மருத்துவ முகாம்) மற்றும் "வாசிப்பை நேசிப்போம்" (மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்) என இரு தலைப்புகளில் சிறப்பாக நடைபெற்றது.




இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிறப்பித்தவர் நமது ஆளுநர் லயன் செல்வம், ஸ்டாலின் ஆரோக்கியராஜ், சிறப்பு விருந்தினராக கலந்து கொன்டு சிறப்பித்தார்.

மருத்துவ சேவைகள் குரு மருத்துவமனை மூச்சுத் திணறல், நீரிழிவு மற்றும் உடல் பரிசோதனை ஹர்ஷிணி மருத்துவமனை - காது, மூக்கு, தொண்டை பரிசோதனை ப்ரீதிகா கண் மருத்துவமனை - கண் பார்வை பரிசோதனை மற்றும் கண் நோய் கண்டறிதல் நிதிலன் ஹோமியோ கிளினிக் - பொதுவான நோய்களுக்கு ஹோமியோபதி மருத்துவம்.

பொதுமக்களுக்கு இலவச ஆலோசனைகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்பட்டன.

கல்வி உதவி 100க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில்,உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி தலைவர் லயன் சிவராமன், தலைமையில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்பு செயலாளர் மதவன், பால வைஷ்ணவி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் அரியூர் லியோ லைஃப் டிரஸ்ட் உரிமையாளர்கள் ரமேஷ், அருண், ஆகியோர் இணைந்து, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

மருத்துவ முகாமை சிறப்பாக நடத்தவும், முழுமையான ஆதரவு அளித்த டாக்டர் ராம்ஜி மற்றும் அவரின் சகோதரர் (இவரும் மருத்துவர்) அவர்களுக்கு மதுரை டியூக் லயன்ஸ் சங்கம் சார்பில் இதயம் கனிந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். பங்கேற்பாளர்கள் உறுப்பினர்கள் லயன் விக்னேஷ், பிரகாஷ்ராஜ், கார்த்திக்குமார்.

நவீன்ராஜ், ஆகியோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள் லயன்ஸ் சங்க செயலாளர் மாதவன், நன்றி கூறினார்

# 32 வது வார்டில் பொதுமக்கள் சிறப்பு கூட்டம்

திருப்பூர், அக.29-

மாநகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருப்பூர் மாநகராட்சி முழுவதும் 60 வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடைபெற்ற வருகிறது.

அதன் ஒரு பகுதியாக திருப்பூர் 2வது மண்டலம் 32 வது வார்டு ஏ.எஸ் பண்டித் நகர் சமுதாய நலக்கூடம் மஹாலில் இன்று காலை 11=00 மணிக்கு நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும் தங்களது வார்டுகளில் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை மனுவாக எழுதிக் கொடுத்தனர். இந்த நிகழ்வில் திருப்பூர் மாநகராட்சி 2 வது மண்டல தலைவர்,32வது திமுக வட்ட கழக செயலாளர் தம்பி ஆர். கோவிந்தராஜ், உதவி ஆணையர் சக்திவேல், கண்காணிப்பாளர் செல்வகுமார், இளம் பொறியாளர்கள் சண்முகசுந்தரம், ராஜு, பில் கலெக்டர் ஜெகநாதன், கழக நிர்வாகிகள் பாலசுப்பிரமணி. கார்த்திக் பழனிச்சாமி. சாக்கு சம்பத். சிவசக்திவேல். குப்புசாமி. தனபால். பாபுஜி.

ராம் குட்டி பிரகாஷ்.மகளிர் அணியினர் சுதா. சகிலா பேகம் மற்றும் ஊர் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்..



# திருச்சியில் குண்டும் குழியுமாக இருக்கும் சாலையை சீரமைத்த போக்குவரத்து காவலர்கள் பொதுமக்கள் பாராட்டு

திருச்சி, அக்.29-

வடகிழக்கு பருவ மழை துவங்கி உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.திருச்சியிலும் அவ்வபோது மழை பெய்கிறது.

இதனால் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம், சிங்காரத்தோப்பு, பாலை பாலக்கரை, தெப்பக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் குண்டு குளியுமாக காட்சியளிக்கிறது.

இந்த இடங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகள் அதிகம் இருப்பதால் மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதைக் கண்டு களத்தை இறங்கிய கோட்டை போக்குவரத்து காவலர்கள் தங்கள் வாகனம் மூலம் மணல்களை எடுத்து வந்து சாலைகளில் கொட்டி குண்டும் குழியுமாக இருந்த ரோடுகளை சீரமைத்தனர்.

தற்போது இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில் போக்குவரத்து காவலர்களுக்கு பாராட்டு குவிந்த வண்ணம் உள்ளது.

# கன்னியாகுமரியில் தொடர் மழையால் பேச்சிப்பாறை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி, அக்.29-

கன்னியாகுமரியில் தொடர் மழையால் பேச்சிப்பாறை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் ஆட்சியர் ஆய்வு செய்தார். பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டத்தை கண்காணித்து உபரிநீரை வெளியேற்ற அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டுள்ளது.




# திருச்சி விமான நிலையத்திற்கு ராஜராஜ சோழ தேவரின் பெயர் சோழ பேரரசு கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

திருச்சி, அக்.29-

சோழப் பேரரசு கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் கொடி அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி திருச்சியில் இன்று நிறுவன தலைவர் என்.சரவணத் தேவர் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்தி அனைத்து சமுதாயத்திற்கும், விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும். ஒரே சமுதாய த்திற்கு மூன்று சாதி சான்றிதழ்கள் வழங்கப்படுவதை ஒழுங்குமுறை படுத்த வேண்டும், திருச்சி விமான நிலையத்திற்கு ஆசிய கண்டத்தின் பேரரசன் ராஜராஜசோழ தேவரின் பெயரை சூட்ட வேண்டும், உலக தமிழர்களின் பேரடையாளம் ஸ்ரீ கள்ளச் சோழன், ராஜராஜ சோழ தேவருக்கு தனி மணிமண்டபம் மற்றும் 110 அடியில் சிலை வைக்க வேண்டும், தமிழகமெங்கும் போலி பிசிஆர் வழக்குகளால் பொதுமக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதை தடுக்க தனி சட்டம் கொண்டு வர வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கட்டத்தில் மாநில இளைஞரணி தலைவர் யுவராஜா தொண்டைமான், மாநில வர்த்தக அணி தலைவர் காளிமுத்து, மாநில பொறுப்பாளர்கள் தர்மா, மாரியப்பன், ஆறுமுகம், திருச்சி கிழக்கு மாவட்ட தலைவர் ராஜசேகர், தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் வேலு, திருச்சி மாவட்ட தலைவர் ஹரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழக எல்லை போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் அரசு உயர்த்திய ஓய்வூதிய தொகையை உடனே வழங்க வேண்டும்

## தமிழக முதல்வருக்கு மொழிப்போர் தியாகிகள் சங்க மாநில தலைவர் இராமு.ராமசாமி கோரிக்கை

சின்னாளபட்டி, அக்.29-

தமிழக எல்லை போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் தமிழக அரசு அறிவித்த உயர்த்திய ஓய்வூதிய தொகை ரூ.1500ஐ உடனே வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வருக்கு மொழிப்போர் தியாகிகள் சங்க மாநில தலைவர் இராமு.ராமசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியை சேர்ந்தவர் இராமு ராமசாமி (வயது 93)இவர் தமிழ்மொழி வளர்ச்சி, தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க மாநில தலைவராக உள்ளார். இவர் விடுத்துள்ள அறிக்கையில் தமிழக எல்லைப்போராட்ட தியாகிகளுக்கும், தமிழறிஞர் (மொழிப்போர்) தியாகிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியம், எல்லை காவலர்களுக்கு ரூ.6ஆயிரமும், மொழிப்போர் தியாகிகளுக்கு ரூ.5ஆயிரம் வழங்கி வந்தது. தங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத்தை உயர்த்தி கொடுக்க வேண்டுமென இந்நிலையில் கடந்த 03.06.2025ம் தேதியன்று தமிழ்மொழி வளர்ச்சி, தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க மாநில தலைவர் இராமு.ராமசாமி தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்ததை அடுத்து கடந்த 03.06.2025ம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற செம்மொழி விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக எல்லை காவலர்களுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியத்துடன் ரூ.1500 கூடுதலாக வழங்க ஆணை பிறப்பித்தார். அதன்பின்னர் 4மாதங்கள் ஆகியும் இன்றுவரை தியாகிகளுக்கு கூடுதல் ஊக்கத்தொகை கிடைக்கவில்லை. மேலும் வயதான மொழிப்போர் தியாகிகள் மாதாந்திர செலவிற்கு கஷ்டப்பட்டு வருவதால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்மொழி வளர்ச்சி, தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகளுக்கு உயர்த்தி அறிவித்த தொகை ரூ.1500ஐ உடனே வழங்க வேண்டும் என்றும் அறிவித்த நாள் முதல் இன்றுவரை உள்ள தொகையை வழங்க வேண்டுமென்று தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.





இராமு.இராமசாமி

# ரஷ்யாவின் அணுசக்தி ஏவுகணை சோதனை வெற்றி: வான் பாதுகாப்பு ஏவுகணைகளால் தடுக்க முடியாது

மாஸ்கோ, அக்.29-

அணு சக்தியால் இயங்கும் புரேவெஸ்ட்னிக் என்ற ஏவுகணையை ரஷ்யா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. இதை எந்த வகை வான் பாதுகாப்பு ஏவுகணைகளாலும் நடுவானில் தடுத்து அழிக்க முடியாது என கூறப்படுகிறது.



ரஷ்யா '9எம்730 புரேவெஸ்ட்னிக்' என்ற அணு சக்தி ஏக்தி ஏவுகணையை கடந்த 2018ம் ஆண்டு அறிமுகம் செய்தது. சக்திவாய்ந்த ஏவுகணை தயாரிப்பு திட்டத்தில் ஈடுடவேண்டாம் என்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா கடந்த 2001ம் ஆண்டு வெளியேறியது. இதையடுத்து நேட்டோ படைகள் விரிவுபடுத்தப்பட்டன. அமெரிக்காவின் வான் பாதுகாப்பு ஏவுகணை திட்டங்களும் விரிவுபடுத்தப்பட்டன.

இதையடுத்து 9எம்730 புரேவெஸ்ட்னிக் என்று அணு சக்தி ஏவுகணையை ரஷ்யா அறிமுகம் செய்தது. இதை அமெரிக்காவின் வான் பாதுகாப்பு ஏவுகணை திட்டத்துக்கான ரஷ்யாவின் பதிலடி நடவடிக்கை என ரஷ்ய அதிபர் புதின் கூறினார். இந்த ஏவுகணையை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செலுத்த முடியும். இது பறந்து செல்லும் பாதையையும் கணிக்க முடியாது என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஏவுகணையை ரஷ்யா கடந்த 21ம் தேதி பரிசோதனை செய்தது. இந்த ஏவுகணை வானில் சுமார் 15 மணி நேரம் பறந்து 14,000 கி.மீ தூரம் சென்றதாக ரஷ்ய ராணுவத் தளபதி ஜெனரல் வலேரி கெராசிமோவ் கூறினார்.

இந்த சோதனை வெற்றிகரமாக முடிந்ததையடுத்து உக்ரைன் போரை நடத்தி வரும் ராணுவ உயர் அதிகாரிகளுடன் ரஷ்ய அதிபர் புதின் பேசினார். போர்க்கால சீருடை அணிந்து பேசிய அதிபர் புதின், ''இது போன்ற சக்திவாய்ந்த ஏவுகணை உலகில் எந்த நாட்டிடமும் இல்லை. இது போன்ற ஆயுதத்தை உருவாக்குவது சாத்தியமில்லை என ரஷ்ய நிபுணர்கள் முன்பு கூறினர். ஆனால் தற்போது, இந்த முக்கிய பரிசோதனை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது'' என பெருமிதத்துடன் கூறினார்.

உக்ரைன் போர் நிறுத்தத்தை கொண்டுவர ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இந்த நேரத்தில் ரஷ்யா அணு சக்தி ஏவுகணையை பரிசோதித்துள்ளது, அமெரிக்க அதிபர் ட்ரம்ப், மேற்கத்திய நாடுகளுக்கு அதிபர் புதின் விடுக்கும் எச்சரிக்கையாக இது கருதப்படுகிறது.

# அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றம்: ஹரியானாவைச் சேர்ந்த 54 இளைஞர்கள் நாடு கடத்தல்

புதுடெல்லி, அக்.29-

அமெரிக்காவில் சட்டவிரோதமான வழியில் நுழைந்த ஹரியானாவைச் சேர்ந்த 54 இளைஞர்களை அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி உள்ளது.



இதுகுறித்து கர்னல் மாவட்ட டிஎஸ்பி சந்தீப் குமார் கூறியதாவது: அமெரிக்காவில் உரிய விசா அனுமதி இல்லாமல் சட்டவிரோதமான வழிமுறையில் குடியேறிய ஹரியானாவைச் சேர்ந்த 54 இளைஞர்களை அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி உள்ளது.

இதில் 16 பேர் ஹரியானாவின் கர்னல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். கைதாலைச் சேர்ந்த 15 பேர், அம்பாலா 5, யமுனா நகர் 4, குருஷேத்ரா 4, ஜிந்த் 3, சோனிபட் 2, பஞ்ச்குலா, பானிபட், ரோத்தக், பதேஹாபாத்தைச் சேர்ந்த தலா ஒருவரும் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களில் அடங்குவர்.

டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய அந்த 54 பேரும் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களை சட்டவிரோதமான வழியில் (டாங்கி ரூட்) அமெரிக்காவுக்கு கூட்டிச் சென்ற முகவர்கள் யார் என்பது குறித்து இதுவரை எவரும் புகார் அளிக்கவில்லை.

இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. அவர்கள் யார் மீதாவது குற்றப்பதிவு இருந்தால் விசாரணையின்போது அது வெளிச்சத்துக்கு வரும். அப்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# தொடர் மழை, மெட்ரோ ரயில் பணி, சாலை பள்ளங்களால் சென்னையில் கடும் போக்குவரத்து நெரிசல்

சென்னை, அக்.29-

மழை, மெட்ரோ பணி மற்றும் சாலைப் பள்ளம் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மோந்தா புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகரில் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு சாலைகளின் இரு புறங்களிலும் மழைநீர் தேங்கியது. பல சாலைகள் குண்டும் குழியுமாக காட்சியளிப்பதால் அந்த பள்ளங்களிலும் மழைநீர் தேங்கியது.

இதனால் வாகன ஓட்டிகள் சீரான வேகத்தில் செல்ல முடியாமல் குறைந்த வேகத்தில் சென்றனர். எனவே பல்வேறு சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும் மெட்ரோ மற்றும் மேம்பாலப் பணிகளால் சாலைகள் சுருங்கிவிட்டன. இதனால் அந்த வழியாக செல்லும் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து செல்கின்றன.

குறிப்பாக அண்ணா சாலையில் இரும்பு மேம்பாலப் பணிகள் நடைபெற்று வரும் பகுதியில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் ஈரடுக்கு மெட்ரோ ரயில் பணி காரணமாக கிண்டி முதல் பூந்தமல்லி வரை சாலையின் இருபுறமும் இரும்புத் தடுப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த பகுதிகளில் பொதுவாகவே வாகன நெரிசல் இருக்கும். தற்போது பெய்து வரும் மழை காரணமாக தேங்கிய நீரால் கூடுதலாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. நேற்று காலை கிழக்கு கடற்கரைச் சாலை, திருவான்மியூர், அடையாறு, பட்டினப்பாக்கம் மற்றும் மெரினா வரை போக்குவரத்து நெரிசலை உணர முடிந்தது.

இதேபோல் பூந்தமல்லி நெடுஞ்சாலை, மந்தைவெளி, மயிலாப்பூர் பகுதிகளிலும் வாகன நெரிசல் காணப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தால் வட சென்னையிலும் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. மழை காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஒரு சில இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும், மழை நின்றவுடன் சிறிது நேரத்தில் அனைத்தும் சரி செய்யப்பட்டதாகவும் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# 2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதல்வர் சூளுரை

சென்னை, அக்.29-

சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் தி.மு.க தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசிய உரை பின்வருமாறு,

"நம் இயக்கம் எந்நாளும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பதற்கு அடித்தளமாக இருக்கும் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முழக்கத்தை முன்னெடுத்திருக்கிறோம்.

உங்களுடைய உழைப்பினால், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்குற நாம், அடுத்து ஏழாவது முறையாவும் ஆட்சி அமைக்க வேண்டும். அதற்குதான் இந்தப் பயிற்சிக் கூட்டம்.

எப்போதும் மக்கள் கூடவே இருந்து பணியாற்றும் உங்களுக்கு, தேர்விற்கு தயாராகிற மாணவர்கள், எல்லாவற்றையும் படித்த பிறகு, மீண்டும் ஒருமுறை revision செய்வதுபோல, நாம் செய்கிற revisionதான், இந்தப் பயிற்சிக் கூட்டம்.

2019 ஆம் ஆண்டு முதல், நாம் எதிர்கொண்ட அனைத்து தேர்தல்களிலும், மகத்தான வெற்றிகளை பெற்று வருகிறோம். நம்முடைய வெற்றிகள், எதிரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2026 தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற போறோம். அன்றைக்கு தலைப்புச் செய்தி, "திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடங்கியது!" என்பதுதான்.

2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

இதை நான் ஆணவத்தில் சொல்லவில்லை. உங்கள் உழைப்பு மீதும், ஆட்சியின் சாதனைகள் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கையில் சொல்கிறேன்.

நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும், கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் சென்று சேர்ந்திருக்கிறது.

லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தையும், தொழில்துறையில் மிகப்பெரிய பாய்ச்சலையும், கல்வித் துறையில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறோம். இதுதான் திராவிட மாடலின் அடையாளம். இந்தியாவில் எந்த மாநில அரசும் நம் அளவிற்கு சாதனைகள் செய்திருக்க மாட்டார்கள்.

ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டிற்கு செய்து வரும் துரோகங்களையும், நிதி ஒதுக்கீடுகளில் செய்யப்படும் வஞ்சகங்களையும் எடுத்துச் சொல்லி, 'தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்ற முழக்கத்தை தமிழ்நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு சென்று பரப்பல் செய்து, இந்த மாபெரும் முன்னெடுப்பை வெற்றியடைய வைத்த கழகத்தின் இரத்த நாளங்களான உடன்பிறப்புகள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய பாராட்டுகள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் ஏற்படுத்திய சுயமரியாதை உணர்வால்தான், பா.ஜ.க.வின் பாசிச ஆட்சிக்கு அடிபணியாமல் முதுகெலும்போடு எதிர்த்து நிற்கிறோம். மக்களுக்கான உரிமைக்காக போராடி வாதாடி வெற்றிபெற்று வருகிறோம். இதையெல்லாம் பார்த்துதான், பா.ஜ.க.விற்கு நம் மீது கோபம் வருது. அதுனால்தான், பல்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

தி.மு.க இந்த மண்ணில் இருக்கும்வரை பா.ஜ.க.வின் பகல் கனவு பலிக்காது. வாக்குரிமையை பறிக்கும் SIR திட்டத்தை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்.

2026ல் "திராவிட மாடல் 2.0 தொடங்கியது!" என்பதுதான் தலைப்புச்செய்தி! : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

அனைவரும் ஒருங்கிணைந்து 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்ற பரப்புரையை முன்னெடுக்க வேண்டும். மாநில நிர்வாகியாக இருந்தாலும்கூட, அவரவர் வாக்குச்சாவடியில் வெற்றி பெறுவது இலக்காக இருக்க வேண்டும். நானே கூட என்னுடைய வாக்குச்சாவடியில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்று, அங்கும் நம்முடைய வெற்றியை உறுதிசெய்வதற்கான பரப்புரையில் ஈடுபடுவேன்.

தி.மு.கழகத்தினரின் முகங்களில் நான் உதய சூரியனை பார்க்கிறேன். அதனைத் தமிழ்நாடு மக்களின் இதய சூரியனாக மாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் கழகத்தினருக்கு இருக்கிறது.

2021 தேர்தலில் தமிழ்நாட்டை கொத்தடிமை அதிமுக கூட்டத்திலிருந்து மீட்ட தேர்தல், 2026 தேர்தல் என்பது தமிழ்நாட்டை பாஜக அதிமுக கும்பலிடமிருந்து பாதுகாப்பதற்கான தேர்தல்.

2026ல் நடக்க இருக்கிற ஜனநாயகத் தேர்தல் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கிற தேர்தல்; தனித்தன்மையோடு தலைநிமிர்ந்து நிற்கிற நம்முடைய ஆட்சியா? டெல்லிக்கு வளைந்து கொடுக்குற அடிமைகளின் ஆட்சியா? என்று தீர்மானிக்கிற தேர்தல்; தமிழ்நாட்டின் சுயமரியாதையையும், தனித்தன்மையையும் காப்பாற்றபோகிற தேர்தல்.


தமிழ்நாட்டை அழிக்க, இன எதிரிகளும் தமிழ்த் துரோகிகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வருகிறார்கள். இவர்களை வீழ்த்தி நம்முடைய மண் ஞூ மொழி ஞூ மானம் காக்க வேண்டும்.

தமிழ்நாடு இப்போது சமூக, அரசியல், பொருளாதார படையெடுப்பை சந்தித்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் அநீதி இழைக்கப்படுகிறது. இந்தியின் பெயரால் சமஸ்கிருதத்தின் பெயரால் ஜி.எஸ்.டியின் பெயரால் புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, சட்டங்கள், உத்தரவுகள், ஆளுநர் என தொல்லை மேல் தொல்லை கொடுக்கிறார்கள். இது தமிழ்நாடு மீது தொடுக்கப்படும் தாக்குதல். இந்த தாக்குதலை முறியடிக்கிற வல்லமை நமக்குதான் இருக்கிறது.

பெயரளவிற்கு திராவிட கட்சியாக இருந்த அதிமுகவை அமித்ஷாவிடம் விழுந்து அடகு வைத்துவிட்டார். அதனை அதிமுகவினரே விரும்பவில்லை. அந்த கூட்டணியை தமிழ்நாட்டு மக்களும் ஏற்கவில்லை. நம் கூட்டணி மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பயன்படுத்தி அனைத்து தொகுதிகளிலும் வெல்வோம்.

திராவிட மாடல் ஆட்சியில் வளப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டை கபளீகரம் செய்து நாசம் செய்ய திட்டமிடும் கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தியாக வேண்டும்.

மக்கள் நலனையும், மாநில உரிமைகளையும் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தமிழ்நாடு தலைகுனியாது!"



# மருதமலை கோயில் மலைப்பாதையில் உலா வந்த காட்டு யானைகள்

கோவை, அக்.29-

கோவை மருதமலை கோயில் மாலைப் பாதை வழியாக காட்டு யானைகள் கூட்டமாகச் செல்லும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

கோவை மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டி உள்ள பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக உணவு தேடி காட்டு யானைகள் கிராமப் பகுதிகளில் நுழையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மக்களால் பெயரிடப்பட்ட ரோலக்ஸ் காட்டு யானை பிடிபட்ட நிலையில், ஒற்றைக் கொம்பன் மற்றும் வேட்டையன் ஆகிய காட்டு யானைகள் மீண்டும் ஊருக்குள் வரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் நேற்று மருதமலை கோயில் மலைப் பகுதி சாலையில் மூன்று குட்டிகளுடன், மூன்று காட்டு யானைகள் சாலையில் நடந்து சென்று, பின் வனப்பகுதிக்குள் சென்றன. மருதமலை கோயிலில் நேற்று சூரசம்ஹார விழா நடந்த நிலையில் வனத்துறையினர் வனப்பகுதியில் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொண்டனர்.

# தோல்வி பயத்தால் முதல்வர் ஸ்டாலின் எதிர்ப்பதாக நயினார் நாகேந்திரன் கருத்து

காரைக்குடி, அக்.29-

தோல்வி பயத்தால் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தை முதல்வர் எதிர்க்கிறார் என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பாஜக நிர்வாகி இல்லத் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தோல்வி பயத்தால் தமிழக முதல்வர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை எதிர்த்து வருகிறார்.வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு நேரு காலத்திலிருந்தே நடைபெறுகிறது. கொளத்தூர் தொகுதியில் 9,000 வாக்காளர்கள் அதிகமாக இருக்கின்றனர்.

தமிழக அரசு அனைவரையும் மது குடிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மது விற்பனைக்கு ரூ.600 கோடிக்கு இலக்கு நிர்ணயித்தது. ஆனால், அது ரூ.750 கோடியை தாண்டிவிட்டது. ஜூன் மாதத்தில் 6.30 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு, செப்டம்பரில் அறுவடை செய்யப்படும் என்பது குறித்து முதல்வருக்கு முன்கூட்டியே தெரியும்.

தெரிந்திருந்தும் விவசாயிகளிடமிருந்து 60 சதவீத நெல் கொள்முதல் செய்யவில்லை. தற்போது 40 சதவீதம் அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்நிலையில் திடீரென மழை வந்துவிட்டதாக வேளாண்மைத்துறை அமைச்சர் கூறுகிறார். ஆனால் காலநிலையை முன்கூட்டியே அறிந்துகொள்ள ரூ.10 கோடிக்கு இயந்திரங்கள் வாங்குவதாக ஏற்கெனவே சட்டப்பேரவையில் நிதியமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் கூறியிருந்தார். இதில் யார் கூறுவது பொய் என்பது தெரியவில்லை? இவ்வாறு அவர் கூறினார்.



# அடுத்த தலைமை நீதிபதி சூர்யகாந்த்: மத்திய அரசுக்கு பி.ஆர்.கவாய் பரிந்துரை

புதுடெல்லி, அக்.29-

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாயின் பதவிக்காலம் நவம்பர் 23ம் தேதியுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில், அடுத்த தலைமை நீதிபதியின் பெயரை பரிந்துரைக்குமாறு பி.ஆர். கவாய்க்கு மத்திய சட்ட அமைச்சகம் அண்மையில் கடிதம் எழுதியது. அடுத்த தலைமை நீதிபதி நியமன நடவடிக்கைகள் ஒரு மாதத்துக்கு முன் தொடங்குவதை முன்னிட்டு இந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற மரபுப்படி தனக்கு பிறகு மூத்த நீதிபதியாக உள்ள சூர்ய காந்தின் பெயரை 53வது தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய அரசுக்கு தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் பரிந்துரை செய்துள்ளார்.

அடுத்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், ஹரியானா மாநிலத்தின் ஹிசார் நகரில் 1962 ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதி பிறந்தவர். இவர் 2004, ஜனவரியில் பஞ்சாப், ஹரியானா உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2018, அக்டோபரில் இமாச்சல பிரதேச தலைமை நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார். 2019 மே 24ல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

# கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு விஜய்தான் முதன்மைக் காரணம்: சீமான்

சென்னை, அக்.29-

"கரூர் சம்பவத்தில் யாரைப் பார்க்க கூட்டம் கூடியதோ அந்த நபர் மீது சிபிஐ எஃப்ஐஆர் பதிவு செய்யாதது ஏன்? என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வினவியுள்ளார்.



இது குறித்து அவர் நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசும்போது, "கரூரில் 41 பேர் உயிரிழந்த குற்றத்துக்கு முதன்மைக் காரணம் விஜய்தான். தவறு இல்லை என்றால் ஏன் முன்ஜாமீன் கேட்கிறார்கள்?. குற்றத்துக்கு காரணமானவரையே சிபிஐ விசாரிக்காது எனில் பிறகு எப்படி நியாயம் வெளிவரும்?. யாரைப் பார்க்க கூட்டம் கூடியதோ அந்த நபர் மீது சிபிஐ எஃப்ஐஆர் பதிவு செய்யாதது ஏன்?. யாருடைய வருகையால் கூட்டம் கூடியது என்பது தான் கேள்வி? விஜய் வரவில்லை என்றால் அங்கு கூட்டம் கூடியிருக்குமா?. இவருக்கு இந்தச் சம்பவத்தில் பொறுப்பு இல்லையா?.

கூட்டணியில் சேர்ப்பதற்காகத்தான் ஆதவ் அர்ஜுனா, விஜய் மீது வழக்குப் பதிவு செய்யவில்லை. கூட்டணிக்கு விஜய் வரவில்லை எனில் அவர் மீது வழக்குப்பதிவு செய்வார்கள். போலீஸ் மீது தவறு உள்ளதா என்பதை விசாரித்து முடிவெடுக்கப்படும். முதலில் உங்கள் பயணம் சேலத்தில் தானே இருந்தது, பின்னர் கரூருக்கு ஏன் மாற்றினீர்கள்?

விசாரணையை சிபிஐக்கு மாற்றியதும் முன்ஜாமீன் மனுவை புஸ்ஸி ஆனந்த் திரும்பப் பெறுகிறார் எனில் சிபிஐ அவரை பாதுகாக்கிறதா?. மக்கள் மனங்களில் மாறுதல் வேண்டும். அப்போதுதான் எல்லாமே மாறும். தேர்தல் முடிவுகள் ஆளுங்கட்சிக்கு தான் சாதகமாக இருக்கும் என்பதை கூற முடியாது. இவ்வாறு சீமான் தெரிவித்துள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000